அருள்மிகு

# பொறிக்கடவை அம்மன் தலபுராணம்

குஞ்சுப்பரந்தன்




ஆக்கம்:- பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்

வெளியீடு:- அருள்மிகு பொறிக்கடவை அம்மன் ஆலய அறங்காவலர் சபை

# அருள்மிகு பொறிக்கடவை அம்மன் தலபுராணம்

## குஞ்சுப் பரந்தன்



ஆக்கம்
**பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்**

வெளியீடு
அருள்மிகு பொறிக்கடவை அம்மன் ஆலய
அறங்காவலர் சபை

# அணிந்துரை

குஞ்சுப் பரந்தனில் கோயில் கொண்டு புதுமைகள் பல காண்பித்த அம்மனுக்கு அரியதோர் நூல் யாத்து அதற்கு அணிந்துரை வரையும் பேற்றைப் பெற்றதற்கு முதலில் யான் பெருமை யடைகின்றேன். இப்பொறிக்கடவை அம்மன் தென்மராட்சி மக்களுக்கே சொந்த மானதாக வயல் புலத்திற்கான வன்னிப் பெருநிலப்பரப்பில் இடையிட்டுக் குடிபெயர்ந்த தென்மராட்சி மக்களின் சொந்தக் கோயிலாகும். தமது மந்தைகளும் வேளாண்மையும் சிறக்க அம்மனைப் பொறிக்கடவைப் புளியடியில் வைத்து ஆதரித்து வயல் வெட்டி வேள்விகள் பூசைகள் செய்து வழிபடுவது வழக்கமாக இருந்து வந்தது. பங்குனித் திங்கள் என்றால் வேள்வி. நீர்ச்சோறு என்றால் சோற்று மலை. இவ்வாறு அன்னதானம் எந்நேரமும் அமுது சுரக்கும் ஆலயமாக விளங்கும் பொறிக்கடவை புதுமைமிக்க புகழ் மிக்க பரம்பரை காத்த ஓர் அன்னையின் ஆலயமாகும்.

இத்தல புராணத்திற்கு அணிந்துரை எழுதுவதற்கு மூலகாரணமாக இருந்த இந்நூலாசிரியர் வலிகாமத்தவராக இருந்தும்கூட வன்னி மண்ணில் அம்பிகையின் அருளை அள்ளிப் பருகிய காரணத்தால் இந்நூலை யாத்து அணிந்துரைக்கே உரித்தாக என்னை இந்நூலுள் ஈர்த்தமையும் அதனால் அம்மன் அருளை அள்ளிப்பருக என்னைச் சேர்த்தமையுமாகும்.

பொறிக்கடவை, சுட்டதீவு அம்மன் யாழ் கடல் நீரேரியின் இப்பாலும், செருக்கன்சாட்டி, நெளியாய், திரியாய் எனக் கடல் நீர் ஏரியின் அப்பாலும் வற்றாப்பளை எனப் புகழ்ந்து பேசப்படும் முல்லைப் பெரும்பதியும் அம்மனின் புகழ்பூத்த திருத்தலங்களாகும்.

எனவே அம்மன் ஆலயத் தொடரிலே பொறிக்கடவை அம்மன் அருள் யாவரும் பெற வேண்டி அம்பிகையின் நல் ஆசி வேண்டி இத்தல புராணம் சிறக்க வேண்டுகிறேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**ப. அரியரத்தினம்**
வலயக்கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்விப்பணிமனை
கிளிநொச்சி.

# பதிப்புரை

வன்னி வளநாட்டின் வட பகுதியில் நெற்களஞ்சியமாக விளங்குகின்ற குஞ்சுப்பரந்தன் பதியில் எழுந்தருளி அன்ன பூரணியாகவும், காவற்தெய்வமாகவும் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அருள் மிகு பொறிக்கடவை அம்பாள் மீது பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் அவர்களால் பாடப்பட்ட தல புராணத்தைப் பதிப்பதில் பெரிதும் மகிழ்வடைகின்றோம்.

ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறுகளில் தமிழ்ப் புலவர்களை அழைத்து அவர்களைப் பரந்தன் சந்தியிலிருந்து ஊர்திகளில் ஊர்வலமாக ஆலயத்திற்கு அழைத்துச்சென்று அங்கு அம்பிகை மீது ஒவ்வொரு புலவரும் தலபுராணம் பாடும் போது அவர்களுக்கு அள்ளுகாசு வழங்குவதெனவும் அறங்காவல் சபையினர் தீர்மானித்தனர்.

அதற்கான ஆரம்ப முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எனினும் நாட்டுச் சூழ்நிலையால் எமது முயற்சிகளை இடைநிறுத்த வேண்டியேற்பட்டது.

இந்த வேளையில் யாழ் இணுவையூர்ப் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் ஐயா அவர்கள் புலம் பெயர்ந்து வன்னி வளநாட்டிற்கு வருகை தந்தார். கந்தபுரத்தில் அவர் வாழ்ந்து வருகின்ற வேளையில் வன்னிவள நாட்டின் திருத்தலங்கள் மீது ஊஞ்சற்பாடல்கள் பாடி அவற்றைப் பதிப்பித்து வெளியிட்டு வைக்கின்ற வேளையில் கலந்து கொள்கின்ற பல சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன.

அம்பிகையின் தலபுராணம் பாடப்பெறுகின்ற பெரும் கைங்கரியம் நிறைவேறாமையையிட்டுப் பெரும் மனக்குறையுடன் இருந்த யான் புலவர் ஐயா அவர்களை அணுகி எனது மனக்குறையை வெளியிட்டேன் அவர்களும் சம்மதித்து அம்பிகையின் அருளால் இக் கைங்கரியத்தைச் சிறப்புடன் நிறைவு செய்துள்ளார்கள்.

நாம் எதிர்பார்த்ததைவிடச் சிறந்த முறையில் பொறிக்கடவை அம்மன் தல புராணத்தைப் பாடித்தந்த பண்டிதர் ஐயாவுக்கு அறங்காவலர் சபையின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்ஙனம்
**க. ம. பத்மநாதன்**
தலைவர்
அறங்காவலர் சபைசார்பாக

# முகவுரை

தமிழகத்திலும் ஈழத்திலும் அருள்வளம் பொலியும் பழமை வாய்ந்த திருக்கோவில்களின் மீது அவற்றின் வரலாறு, அருட்கீர்த்தி கூறும் தலபுராணங்கள் பாடப்பட்டுள்ளன. பத்திச் சுவைக்கு முதன்மை கொடுத்து, கடவுள் வாழ்த்து, நாட்டுப்படலம், நகரப்படலம், ஆற்றுப்படலம், நூற்பயன் முதலிய உறுப்புக்களை உள்ளடக்கி இவை பாடப்பட்டுள்ளன. ஏராளமாகத் தமிழ்நாட்டுத் திருத்தலங்கள் மீது தலபுராணங்களைப் பாடித் தள்ளியவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள்.

இவ்வாறு பல நூற்றுக்கணக்காகத் தலபுராணங்கள் தோன்றியிருந்தும், பரணிப்பிரபந்தத்துக்கு ஒரு கலிங்கத்துப்பரணி போலவோ, உலாவுக்கு ஒரு சோழனுலா போலவோ, ஒரு குற்றாலக்குறவஞ்சி, ஒரு மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், ஒரு முக்கூடற் பள்ளு, ஒரு திருக்கோவையார் போலவோ தலபுராணம் ஒன்றேனும் பரந்துபட்ட புகழைப் பெற்றதில்லை. இலக்கிய ரசிகர்களால் சரி, பத்திமான்களால் சரி, வரலாற்று, சமூகவியல் ஆய்வாளர்களால் சரி பெரிதாகப்போற்றிக் கற்கப்பட்டோ, திறனாய்வு செய்யப்பட்டோ நாம் அறியவில்லை. இந்த நிலையில் நானும் ஒரு தலபுராணம் பாடப் புகுந்தமை பொருத்தமான செயலா? சமகால எதிர்கால சமூகத்தின் வாழ்வு, தனிமனித வாழ்வு, ஆன்மீக மேம்பாடு என்பனவற்றில் எவற்றுக்காவது ஊட்டந்தரும் முயற்சியா இது? என்ற ஒரு நியாயமான கேள்வி எழுகின்றது.

தானங்களுட் சிறந்தது கல்விக்கொடை என்பது நாவலர் பெருமான் கூற்று. கற்றலின் பயனே கடவுளை வழிபடும் தீர்மானம் பெறல் என்ற வள்ளுவர் கருத்தின்படி, இக்கூற்றின்

பொருள் ஒருவன், ஆண்டவனை நம்பி வழிபடுபவனாக மேம்பட உதவும் மெய்ஞ்ஞானத்தை அவனுக்கு வழங்குவதே ஒப்புயர்வற்ற கொடை என்பதேயாகும். இக்கொடைக்கு இன்று மிகுந்த தேவை இருக்கிறது.

நாம் "கடவுள் தான் அறம்: அறம் தான் கடவுள்" என்று நம்பத் தவறிக்கொண்டு, அறமல்லாத செயல்களுக்கு நம்மைத் தூண்டும் இச்சைகளை வெல்லாமல், வெல்ல முயலாமல், கடவுள் வழிபாடென்று பலவிதமாக வீணாகக் காலத்தை, சக்தியை விரயம் செய்து கொண்டிருக்கிறோம்.

அறம் நம்பும் பலரோவெனில் நாம் அறநெறியில் வாழ்கின்றோம் என்ற துணிச்சலில், பணிவற்ற மனநிலையில் எல்லாம் வல்ல பரம்பொருளுக்குத் தலைவணங்கத் தவறி, முன்பிறவிகளில் செய்த பழிகளின் அறுவடைகளாகத் துன்பங்கள் சூழும்போது, "நான் சரியாக நடந்துமா இப்படி?" என்று மலைத்து மனமுடைந்து நடைப்பிணங்களாகத் தளர்கிறார்கள், அல்லது தாமும் அறமல்லாத செயல்களில் இறங்கத் துணிகிறார்கள்.

குறையணுகாப் பரிபூரணமான ஒரு கடவுளுக்குப் பணிய மறுத்து, குறைப்படைப்புகளான மனிதர்களை நம்பிப் பணியப்போய், ஈற்றில் ஏமாந்து, கலங்கிப் பழிநோக்கிய பாதையில் ஆவேசமாக இறங்கப் பார்க்கிறார்கள் வேறு சிலர்.

தாம் ஆன்மீக நெறியில், தடைகள் குழப்பங்களின்றி நிம்மதியாக வாழ்ந்துய்யத் தேவையான தனிமனித சுதந்திர, அரசியல், பொருளாதாரப்புறச்சூழல், தாம் வாழும் தேசம் ஒன்று வேண்டும் என்று, நம்மோர் பல தலைமுறையினர் உணரவும், பேணவும் தவறிய மடமைதான் தம் சொந்த மண்ணிலேயே அழிவுகளுக்குள்ளாகி வெதும்பும் பரிதாபநிலைக்கு இன்று அவர்களைத் தள்ளியுள்ளது.

இந்த இக்கட்டான காலகட்டத்தில் நிற்கும் இம்மண்வாழ் தமிழர்களை ஈடேற வைக்கக்கூடிய இறை நம்பிக்கை அனுபவங்களுக்கே இத்தலபுராணத்தில் முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது நம்மான்மாவுக்குக் கிளர்ச்சியூட்டும் பக்திமயமான காட்சிகள், கூட்டு வழிபாடுகள், பூசைகள் என்பனவற்றை உடனிருந்து நாம் அனுபவிப்பது போலவே, அவற்றின் கதைகளைக் கேட்பதும் படிப்பதும், இறை திருப்பெயர்களைப் பன்னுவதும், இறைச்சிந்தனையில் மூழ்குவதும் கூட எம்மனங்களைத் தூய்மைப்படுத்தி, இறைவனை எங்கள் மீது அருள்கொள்ள வைத்துதவும் என்பது அன்றிருந்தே எம்மான்றோரிடை நிலவும் நம்பிக்கை . இக் கருத்திற்கமைய இப்புராணமும் பாடப்பட்டுள்ளது.

அத்துடன் ஈழத்தமிழன் தன் சமூக , ஆன்மீக வாழ்வை மறுமலர்ச்சி பெறவைக்கும் உற்சாகத்தை ஊட்டக்கூடிய இத்தேசத்தின் மீதுள்ள அவனது வரலாற்றுப்பூர்வீக உரிமையை உணரவைக்கும் நிகழ்ச்சிகளையும், உறுதியான வரலாற்றுச் சான்றுகளையும், இம்மண்ணின் வாழ்வளிக்கவல்ல இயற்கை வளங்களையும் பொதிந்து, ஓர் ஆன்மீக சமூக, வரலாற்றுப் படைப்பாக இத்தலபுராணம் பாடப்படும்படியாக இக்கண்ணகையம்மன் என்னுள் நின்று ஆடல்புரிந்து, ஆட்டிப்படைத்துள்ளாள் என்பது என் ஆன்மார்த்தமான நம்பிக்கை. வன்னிக் கோவில்களுக்கே சிறப்பெழிலாக விளங்கும் பொங்கல் மடை வழிபாட்டின் மகோன்னத பக்திப்பெருக்கை இப்பொறிக்கடவை அம்மன் ஆலயத்தில் நான் அனுபவித்து மெய்சிலிர்த்தமையும், இப்புராணத்தின் பாடல்களில் நூற்றுக்கு மேற்பட்டவற்றை ஒரேநாளில் என்னால் பாடமுடிந்தமையும் “எல்லாம் அவள் செயலே” என என்னை நம்பவைக்கின்றன.

இவ்வாலயத்தின் அருட்பெருக்கை, வரலாற்றுப் பெருமையை, இயற்கைச் சூழலின் எழில் வளத்தை, தமிழர்களுக்கேயுரிய வழிபாட்டு மரபுகளை இப்புராணப்

பாடல்களிலேயே வாசகர்கள் நேரடியாகப்படித்து அனுபவிக்கும் படி விட்டுவிடுகிறேன்.

பொறிக்கடவைக் கண்ணகையம்மனின் அருளாட்சிக்கு உட்பட்ட குஞ்சுப்பரந்தன், பெரிய பரந்தன், உருத்திரபுரம், சிவநகர், நீவில் முதலான சுற்றாடல் ஊர்மக்களின் அம்பாள் மீதான நம்பிக்கையும், அடித்தொண்டும் வணங்கப்பட வேண்டியவை.

இந்த அடியவர் பரம்பரையில், பெரியபரந்தனில் பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் ஒரு குடியில் தோன்றிய அம்பாளடியவரான கிராமத்தலைவர் மகாலிங்கம் அவர்களின் புதல்வரும், கிளிநொச்சி பிரதிக்கல்விப்பணிப்பாளரும் இவ்வாலயத்தின் அறங்காவற் சபையின் தலைவருமான திரு.ம.பத்மநாதன்அவர்களே என்னை இந்த ஆலய அம்மனின் அருட்பெருக்கில் குளித்து வணங்கி வரங்கள் பெற்று, அம்பாள் மேல் இத்தலபுராணத்தைப் பாடத் தூண்டுதலாய் விளங்கியவர். அப்பெரியாருக்கும், இவ்வாலயம் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களை எனக்கு வழங்கியுதவிய அறங்காவற் சபைப் பொருளாளர் திரு.வே.பாலசுந்தரம் ஆசிரியர் அவர்கட்கும், கண்ணகையம்பாள் அடியர் யாவருக்கும் அம்பாள் இன்னருள் என்றுங் கிடைக்க வேண்டி வணங்கி நிற்கிறேன்.

**அன்பன்**

**ச. வே. பஞ்சாட்சரம்**

# குஞ்சுப்பரந்தன் அருள்மிகு பொறிக்கடவை அம்மன் தலபுராணம்



பாடியவர்
பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்

## விநாயகர் காப்பு

பென்னம் பெருங்கீர்த்திப் பிள்ளைச் செகராசா
அன்னை பொறிக்கடவைக் கண்ணகியாம் - இன்னமுதை
உண்ணெகிழ்ந்து பாட உதவி இனியேனும்
எண்ணென்னை ஏர்க்கஇணு வில்!

## கண்ணகியம்மன் காப்பு

கொஞ்சி அலைகள் கூத்தாடும்
குஞ்சுப் பரந்தன் பழம்பதியின்
நெஞ்சந் தோறும் நிலவாகி
நிறைந்து குளிர்ந்த கண்ணகியே!
செஞ்சொற் பனுவல் எனக்கீந்து
தீம்பா அவற்றுள் நீதுலங்கக்
கொஞ்சம் கருணை கொள்ளம்மா!
கோவில் பொறிக்கட வைவாழி!



# கடவுள் வாழ்த்து

**கணபதி**

01. போதப் பொலிந்தவுரு
புத்தியெல்லாஞ் சாந்திதரும்
காதுகள் தழைத்த
கணபதியின் தாள்வாழ்க!

02. வேரறுக்க வல்லாய்
வினையென்பர்! எம்பழிகள்
தீரஅருள் செய்தெம்முள்
தினம்வாழ்க ஐந்துகரா!

**சிவன்**

03. அவமாய் வருந்தி
அழியெம்நே ரம்மீட்டு,
சிவந்ததனால் சிவனே, எம்
தீவினைகள் கெடவாழ்

04. பாசச் சுழிக்குள் நாம்
பம்பரமாய்ச் சுழலாமல்
நேசம் உனக்காய், எம்
நெஞ்சுருக நீவாழி!

**கண்ணகி**

05. "கண்சிரிப்பாள்" காரணப்பேர்க்
கண்ணகியே, என்றும், இம்
மண்சிரிக்கும் மங்களங்கள்
வளம்பெருக்கி வாழியம்மா!

06. மறுதலித் துனை, தம்மை
மற்றோரைக் கெடுக்கின்ற

அறியார்நெஞ் சறிஒளியாய்
அருந்தாய்க்குத் தாய்வாழி!

**முத்துமாரி**

07. வன்னியுயிர் நாடிமழை!
மழைத்தெய்வம் நீ! அதனால்
வன்னியுயிர் நாடிமுத்து
மாரியம்மா நீ வாழி!

08. மழைதந்து கண்ணகிபோல்
வருத்தும் வெப்பு நோய் தடுத்து
குளிர்பொழிலாய்! இவ்வூர்கள்
குளுகுளுப்பு மிகவாழி!

**சிவகாமி**

09. தாய்மை இரக்கமின்று
சாவடைந்து போமுலகம்,
சாய்த்துச் சுயநலங்கள்,
தலைநிமிர உமைவாழி!

10. பிரபஞ்சக் கொடிசெடித்த
பேருந்திச் சிவகாமீ
ஒருபஞ்சம் இல்லாமல்
உலகமுய்ய வாழியம்மா!

**முருகன்**

11. கலியுகத்தில் அறங்காக்கக்
கைபன்னி ரண்டுடன்வேல்
வலிமையும் திரண்டவனே
வாழஅறம் வாழியவே!

12. அழக! அப்பன் அடிபணிந்த
அருள்ஞான தேசிகனே!
இழவுகளின் மயமாகும்
ஈழமுய்ய வாழியவே!

**சந்தான கோபாலன்**

13. வேய்ங்குழலின் வேந்தே! உன்
விளையாடல் ஓய்ந்ததனால்
சாய்ந்து வரும் அறம்மீட்டுத்
தரணி வாழ வாழியவே!

14. மாடுகன்று மட்டும் உன்
வாஞ்ஞை பெற, மானிடர்நாம்
ஓடியோடி வீழ்ந்திறவோ?
உளமிரங்கி நீ வாழி!

**வைரவா**

15. மணங்கமழ மடைபரவி,
மரநிழலில் வைரவரே,
வணங்குமன நிம்மதிநாம்
மறுபடியும் பெறவாழி!

16. பகல்காணா வாழ்விருளில்
படுந்துன்பம் பண்ணுபழி
மிகுவிக்கும் அகந்தையரின்
வெறித்தலைகள் கிள்ளிவாழி!

**வீரபத்திரர்**

17. பரப்பிழம்பே, விறல்வீர
பத்திரனே, அடலேறே,
உருத்திரனை உச்சஎண்ணும்
உலுத்தர்வேள்வி கெடவாழி!

18. தக்கன்களாய்த் தலைகொழுத்த
சண்டாளர் ஆகாமல்,
தக்கவராய்த் தழைத்திடநாம்
தக்கன்சங்கா ரா! வாழி!

**ஐயனார்**

19. அரியரர்க்குப் புத்திரனே,
ஐயப்ப னாயும்வந்த
கரியவனே, நாம்கயமை
கடிந்தோங்க வாழியவே!

20. அசமுகியின் அடலழித்த
மாகாளர் ஆண்டானே,
விசுவசிப்பில் மகிழ்சாத்தா,
விசுவசித்தோம்! கா! வாழி!

**கலைமகள்**

21. மெய்ஞ்ஞானக் கலையரசீ!
வெறிக்கும்நம் மனந்திருத்தி
உய்ஞ்ஞானம் ஓங்க எம்முள்
ஒளிவிளக்காய் வாழியவே!

22. வெண்மைகளில் வெளிப்படுவாய்,
வெகுத்தஒளி மனமெமக்குள்
நண்ணிநல்கி ஆனந்தம்,
நலந்துளும்ப வாழியவே!

**முனீஸ்வரர்**

23. சிதறுண்டு குடும்பங்கள்,
திக்கொன்றாய் அலைகின்ற
இதயங்கள் சாந்தியுற
இரங்கிவாழி முனியப்பா!

24. சுடக்கறுக்குஞ் சோத்திகளாய்த்
துவளாமல், பொன்போலச்
சுடச்சுடவே ஒளிவீசுந்
தூய்மைபெற நாம்வாழி!

**சூரியக்கடவுள்**

25. அணுக்கருக்கள் சிதறுகைகள்,
ஐக்கியங்க ளால் வலுவீன்
றிணக்கமுறப் பிரபஞ்சம்
இயக்குகதி ரவன்வாழி!

26. காற்று, மழை, வெயில், பனிகள்,
காண்பருவ காலங்கள்
தோற்றுவித்துப் பரவெளிவாழ்
சூரியக்கட வுள் வாழி!

**பிறதெய்வங்கள்**

27. சித்துமலி பத்திரகாளி
சிவநாக தம்பிரான், நல்
சுத்தமன ஆஞ்சநேயர்,
துர்க்கைஜயப் பன்வாழி!

28. எந்தெந்த மதத்தாரும்
ஏத்துமிறை மூர்த்தங்கள்
தந்துதூய அறச்சிந்தை,
சகம்சாந்தி பெறவாழி!

**நாட்டுப்படலம்**

29. பெருங்கற் கால பெயர்கொள் ஆண்டு
மூவாயி ரத்தின் முன்பே,
பரந்து தமிழர் வாழ்ந்த குஞ்சுப்
பரந்தன் தமிழர் தேசம்!

30. ஏமுற் றிங்கே எம்முன் னோர்கள்
இருந்தார் தம்மை ஆண்டு!
ஈமத் தாழி, ஏரி எச்சம்
இணையில் அகழவுச் சான்று!

31. கண்டங் குமரி கடல்வி ழுங்கிக்
காலங் கால மாகத்
துண்டுபோட்ட ஈழத் தீவும்
தொன்மைத் தமிழன் நாடு!

32. சேர, சோழ, பாண்டி யர்பின்
திகழ்ந்த தேசம் அங்கே!
ஈர ஆழி பிரித்த தமிழர்
ஈழத் தேசம் இங்கே!

33. அங்கும் இங்கும் அன்னைத் தமிழின்
ஆர வாரம் அன்று,
சங்கம் தன்னில் ஈழப் பூதன்
தந்த கவிகள் உண்டு!

34. எண்ணூ றாண்டின் முன்பல் லாண்டு
இங்கு சோழர் ஆட்சி
பண்ணிச் சிவனின் கோவில் இங்கு
பலவும் அமைத்த மாட்சி!

35. குஞ்சுப் பரந்தன் பொறிக்கட வையாம்
குறிச்சி யண்டைச் சோழர்
செஞ்சி வற்கு வைத்த கோவில்
திகழ்வ தின்றுங் காண்போம்!

36. உருத்தி ரபுரம், நகரப் பரந்தன்
ஊரந் நீவி லோடு

இருண்ட ஏரிச் சிவ நகர் சூழும்
இடமே குஞ்சுப் பரந்தன்!

37. பூந கரியாம் பெருங்கற் காலம்
பொலிந்த தமிழன் நகரைத்
தானடை யும் நீள் சாலை புகுந்து
தாண்டுங் குஞ்சுப் பரந்தன்!

38. நாட்டை விட்டு விரட்டப் பட்டு
நாவாய் தம்மில் வந்த
கூட்டம் தீவின் தெற்கில் குந்திக்
குழப்பம் இங்கு கிளரும்!

39. பண்டு நாடு பலநூ றாண்டு!
படையெ ழுச்சி தம்மால்
மண்டு காடாய் வன்னி யெங்கும்
மாறும் சோழர் பின்னே!

40. அடங்காப் பற்றென் றாதிக் காலம்
அழைக்கப் பட்ட தேசம்
கொடும்வெப் பிடிமின் னல்ம ழைக்கும்
குலையா மக்கள் தேசம்!

41. மன்னர் மாகன், குளக் கோட்டன் தாம்
வரச்செய் இந்தி யாதன்
வன்னித் தலைவர் எழுவர் குறித்து
வழங்கும் பெயரே வன்னி!

42. ஏழு நூறு ஆண்டின் முன்னே
இந்தப் பெயர்கொள் மண்ணில்

ஆழியோரக் குஞ்சுப் பரந்தன்
அழகு பேணும் நாளில்,

43. முதலாம், இரண்டாம், ஆறாம், பராஅக்
கிரம பாகு மூர்க்கர்
சதிகளால், பின் சங்கிலி யன்தன்
சாத னைக ளாலும்,

44. வன்னி மக்கள் யாழ்கு டாவுள்
வாழ்வு நாடிப் புக்கார்!
துன்னிக் காடு வன்னி நாடு
சுடர்வி ழுந்த தென்பர்!

45. முந்நூ றாண்டின் முன்னர் வைர
முத்துபண் டார வன்னி
மன்னன் வீரம் தன்னைக் கடந்து
வந்தார், கொண்டார் வன்னி!

46. வந்த போர்த்துக் கேயர், பின்பு
வந்த ஒல்லாந் தர்தாம்
இந்த வன்னி யாழ்கு டாவுக்
கிட்டார் மலபார் பெயரே!

47. தென் மராட்சித் தமிழ ராட்சி
திகழ்ந்த குஞ்சுப் பரந்தன்
செந்நெற் காடு செழித்து யிர்ப்புச்
சிறந்த தொன்மை காக்கும்!

48. இக்க ரைமேல் குஞ்சுப் பரந்தன்
எதிரில் கடல்நீ ரேரி!
அக்க ரைக்கச் சாய்த்து றையால்
அமைந்த கு.டாவின் தொடர்பு!

49. முத்து முதிர்ந்த புளி, பனைகள்
முளைநி லைக்கான் மரங்கள்
காத்துக் கூறும் எம்முந் தையர்
காலித்த பழமைக் கதைகள்!

50. கும்பல் கும்ப லாக வயலுள்
குரும்பைப் பனைகள் ஓங்கி,
இம்பர், உம்பர் தமையி ணைக்கும்
இனிய குஞ்சுப் பரந்தன்!

51. வரப்பு யர்ந்த வயல்வெ ளிக்குள்
வந்து வந்து படியும்
நெருக்க மாக நீண்ட காலின்
நிலாவெண் கொக்குக் கூட்டம்!

52. பூந கரிமண் ணித்த லையினில்,
புதிய ஸ்கந்த புரத்தில்,
ஏனை வட்டக் கச்சி யிற்போல்
இந்த வன்னியூர்கள்

53. புதைந்த தமிழன் பண்டை ஆட்சிப்
புதினஞ் சொல்லும் கோவிற்
சிதைவு தம்மைத் துருவி ஆய்கில்
சிறக்கும் சைவம் தமிழும்!

54. இன்னும், அன்னை கோவில் இன்றும்
இருக்கும் சூழல் அகழ்ந்தால்
அன்னை மூன்றா யிரமாண் டின்முன்
அமர்த்திங் காண்ட உண்மை,

55. வெளிப்பட் டீழ மேன்மை துலங்கும்!
மீண்டும் தமிழ னாட்சி

தழைத்திங் கிந்த வாய்ப்புச் சேரத்
தாயின் கருணை கேட்போம்!

**நகரப்படலம்**

56. பரந்தன் நகரின் பங்கே குஞ்சுப்
பரந்தன் குறிச்சி, பொறிக்கடவை!
விரைந்தே வளர்இந் நகரின் கீர்த்தி
விளம்பின் கண்ணகி விஞ்சருளே!

57. உப்பு விளைக்குங் குறிஞ்சாத் தீவினில்
உப்புக் கும்பிவேய் குடிசை மிகும்!
அப்பால் வலைஞர் குடிவள் ளங்கள்
ஆர்நாரை கொக்குமீன் கொத்திமயம்!

58. மீசாலை, சாவகச் சேரிப் பூர்விகர்
விளங்கிடும் பொங்கல் பூசையினால்
தேசுறும் ஆளுகை செலுத்தும் குறிஞ்சாத்
தீவிலோர் கண்ணகித் தெய்வம் உண்டு!

59. சட்டியே கொள்ளுந் தண்ணீர் தெரியும்
தருங்கொளக் கொளவேண்டுந் தண்ணீர்
சுட்டதீ வம்மனைச் சூடலும் இந்நகர்
தொல்பொறிக் கடவையாள் சூழ்கருணை!

60. பெரிய பரந்தன் குழந்தையர் மோட்டைப்
பிள்ளையார், பத்திர காளியம்மன்
திருவடித் தொண்டில் செயற்படு வோர்தம்
சிந்தைமின் னல்செயும் கண்ணகித்தாய்!

61. அமரர் இடர்கெட அமரம் புரிவேலன்
அமர்ந்திக் கலியுக இடர்களைந்து

குமர புரந்தனில் கொஞ்சய லூர்களில்
குடிகளைக் காக்கும்நல் நகர்பரந்தன்!

62. முன்னையித் தாய்பூச கர்வேத வனம்வயல்
முதிரித்தி யாத்தி இணைநீழலில்
தன்னுருக் காட்டைங்க ரற்குன்வ தளிகீர்த்தி
தழைத்திடும் அயல்ஆண்டான் கட்டினிலே!

63. பற்பல நூற்றுவர் பணிசெய் ரசாயன
ஆலையின் பாங்கரில் அவர்தம் தொண்டால்
அற்புதம் பலபுரி ஐங்கரன் வந்ததும்
அன்னை பொறிக்கட வையாள் அருள்!

64. பரந்தனில் புகைவண்டி பயில்நிலை யம்முன்னே
பரிந்தமர் பரணியான் வைரவரும்
வரந்தரப் பொறிக்கட வையமர் கண்ணகி
வழிப் போக்கர்க் காக்க வென்றனுப்பருளே!

65. ஊர்பல விட்டிங்கு வந்துவந் தேறுநர்
ஊரவை பேணு தத்துவங்கள்
சீர்பெற இங்கும் திகழ்த்தும் மரபினால்
செழிப்புறும் பண்பாட்டுப் பரந்தன் நகர்!

66. கோரக்கர் எனப்படு கோன்குடி முன்செய்
கோரக்கர் குளம்பொலி பரந்தனிலே
தேருக்குச் சக்கரம் செய்பயன் ஓங்கச்
செழிப்பிப்பள் மருதுகள் கண்ணகித்தாய்!

67. கொண்டலி யான்எனும் ஐங்கரன் கோவில்
குஞ்சுப் பரந்தன் துறையிலுண்டு!
கொண்டிட முன்னம்மன் கொடுப்பர் முதற்பூசை
குளிர்பொங்கல் இந்தவி நாயகற்கே!

68. அண்டியே கண்ணகி ஆலயம் வாழ்சாத்தன்
ஐயனார் ஏற்பார் இரண்டாம் பூசை!
வண்டியிற் போய்ப்பூசை பூசகர் நன்காற்றி
வந்துதான் பூசைகள், பொங்கலிங்கு!

69. கலகலப் பானாறு, புகையிலைப் பிட்டாறக்
காலத்தில் கண்ணகி தளிமுன்னோடும்!
நிலம்வெடி கோடையோ நெருப்பு! அது தீர்த்தவள்
நிறைநீர்க் கனகாம் பிகைக்கண்ணகி!

70. சூழ்வயற் பச்சையுள் துன்னுதெங் கின்பொழில்,
தொலைதொலைக் குடிகள் தொடுதெருக்கள்!
ஆள்நெருக் கம்மிக அங்காடி, கடைவங்கி,
அரிசி நல் காலைகள் மலிபரந்தன்!

71. புதுப்புதுக் குடியேற்றத் திட்டங்கள் எழவெழப்
புழக்கமும் மிகுந்திடப் பரந்தன் நகர்!
மதித்தெந்தத் தொழில்களும் மலர்ந்தன்பு சமத்துவம்
வணங்கிடும் பரந்தனிக் கண்ணகியை!

72. சந்தடி மிக்கெழு சந்தைகள், பள்ளிகள்
சந்த இசைகூத்துக் கலைகள் பல்கும்!
இந்திர லோகமே இப்பரந் தன்! வளம்
ஈந்தவள் பொறிகட வைக்கண்ணகி!

73. இப்பரந் தன்அன்றி இவ்வன்னி முழுதுமே
ஏந்திக்கை வரம் பெற்றோர் நேர்த்திதீர்க்க
தெப்பம், திருக்கல்கள், உந்துக ளில்வந்து
தினம்பணி பொறிக்கட வைக்கண்ணகி!

74. தொட்டுவான் திரையில் சுடர்நீலம் தீட்டும்
தூரிகை போல் நிமிர் பனைகள் நீட்டும்,

தட்டுவன் கொட்டித் தங்க வயல்களும்
தாங்கிவாழ் பொறிக்கட வைக்கண்ணகி.

75. பொன்பூம யக்கொன்றை, மின்கனி நாவல்கள்,
புளி, மா விலங்கித்தி ஆல், ஆத்தியின்
இன்னிழல் மேய்ப்பர் இளைப்பா றடவிகள்
எம்குஞ்சுப் பரந்தன்தாய் ஈவளங்கள்!

76. பண்டுபாய் பரவிப் பாய்ஞ்சான் ஒழுங்கறு
பணிதடு நீர்மடு இரணைமடு
கண்டருள் தாய்கன காம்பிகை, பின்னாளில்
கண்ணகி ஏற்றதோர் புதியமூர்த்தம்!

77. தீவண்டிப் பாதையும் செல்கண்டிச் சாலையும்
திறந்திட முன்குடா, பரந்தனுக்கு
மேவிய பாதை கடல்வழிப் பாதை,
மினப்பரந் தன்பூந கரித்துறைகள்!

**உற்பத்திப் படலம்**

78. ஆதித் திராவிடர் சிந்து வெளியிலும்
அம்மன் தன்னையேத் தந்த மரபிலே
ஈதிவ் வீழத்தில் ஆதித் திராவிடர்
ஏத்தல் அம்மனை இயற்கை யல்லவோ?

79. மரங்க ளடிகளில் வைக்கும் மேடைகள்
வரிக்கும் இறையுரு இருப்ப தாய்க்கொண்டு,
திருந்து பூசைகள், பொங்கல், படையல்கள்
செய்தொ ழும்நெறி திராவி டர்நெறி!

80. அந்நெ றியினில் குஞ்சுப் பரந்தனும்
அம்மனைத் தொழும் அழகி ருந்திட

மின்னு கற்பனல் வீறு கண்ணகி
மேவி னள்ழ மெய்ப்ப திபல!

81. பத்தி ரண்டுநூ றாண்டுகள் முன்பு
பத்தி னித்தெய்வம் கண்ண கியன்னை
இத்தீ வுப்பொறிக் கடவை, கொம்படி,
இன்னும் கோலங்கி ராய், வற்றாப்பளை

82. அங்க ணக்கட வை, செட்டிப்புலம்,
அன்ன சங்குவ யல்மு தற்பல
எங்க ஊர்களில் இனித மர்ந்தனள்.
இலங்கை தெற்கிலும் எழுபல் கோட்டங்கள்!

83. அகன்று மக்களும், அடவி மூடியும்,
அழித்துஞ் சேனைகள் மறையுங் கோவில்கள்!
புகுந்தது நிலம் குஞ்சுப் பரந்தனில்
பூத்த கண்ணகி தளியும் இங்ஙனே!

84. காலங் காலமாய்க் கலகஞ் சண்டையால்
கனலும் தீவிது! கண்டு காய்த்தபல்
மூல வர்முனைத் திங்கு தங்கியே
முத்து நெல்வளம் பெருக்கி வாழ்ந்தனர்.

85. மன்னார் மேற்கெல்லை, கிழக்கே திருமலை,
தெற்க னுராத புரம், யாழ் வடவெல்லை!
வன்னி மூவாயி ரஞ்ச துரநல்
மைல்ப ரப்பிலே மலர்ந்திருந்தது!

86. காடும் ஓர்புறம்! கடலும் ஓர்புறம்!
கழனி நெல்வயல் நடுவில் வீடுகள்!
ஆடு மாடுகள் பட்டி கள்பயிர்
அழிக்கும் யானைகள், பன்றி கள்பயம்!

87. காக்கப் பட்டிகள், பயிர்கள், மக்களை
கண்ண கிகழல் கருத்து மேளத்துவர்!
தேக்கு நீர்க்கடல் ஏரி தாண்டிய
தென்மராட்சியில் புழக்கம் ஓர்பலம்!

88. வன்னி மன்னரின் காலம் வன்னியில்
வனத்து யானைகள் பணிக்கர் குலத்தினால்
என்ன விதத்திலோ வசப்பட் டேமன்னர்
இருங்க ரிப்படை பெருகச் சேர்ந்திடும்!

89. இன்னுமோர் கும்பல் ஏற்று மதிக்கென
எடுப்பர் தந்தங்கள்! யானை கள்கொலும்
அந்நி யர்இவர் யானை வீழ்த்தவே
அமைக்கு வர்பொறிக் கிடங்கு காட்டினில்!

90. குஞ்சுப் பரந்தனில் கொழுக்கும் காட்டிலிக்
கொள்ளையர் வைத்த பொறிக்கி டங்கிலே
குஞ்ச ரம்ஒன்றும் விழாமை யால் வந்த
கொதிப்பு டன் அந்தக் காடு லாவினர்!

91. அன்ன வர்வியப் பெய்த அங்கொரு
ஆல யம்நிகர் குடிசை தன்னிலே
அன்னை பூசையில் ஓர்வ யோதிபர்
அகங்க சிந்தியங் கிடுதல் கண்டனர்!

92. "என்ன செய்கிறாய்?" என்ற தட்டினர்!
"இறைவி பூசை" என் றியம்பப் பூசகர்,
"உன்னி றைவியோர் உண்மைத் தெய்வமேல்
உங்கு நாமிட்ட பொறிக்கிடங்கிலே

93. வீழ்த்த வேண்டுமோர் கொம்பன் யானையை
விடியு முன்னமே! வீழ்த்த வில்லையேல்
வீழ்த்தி யுன்னையக் கிடங்கில் மூடுவோம்!
விளம்பிச் சென்றனர் மிரளப் பூசகர்!

94. அன்னை தந்தையும் அன்புச் சோதரர்
அயலுஞ் சுற்றமும் அனைத்து மாமென்றன்
அன்னை கண்ணகி அடியை நீங்கவோ
அல்ல திங்கிருந் தெய்த வோகொலை?

95. உளங்கு மைந்தவர் உந்தல் ஒன்றினால்
உடன கன்றொரு தொலை வொளித்தனர்!
அழுங்கு துன்பினில் அகலச் சில்தினம்
அச்சந் தீர்ந்ததும் அண்டி னார்டகுடில்!

96. அம்மன் பூசைகள் ஆற்றி நிற்கையில்
அங்கு வந்தனர் ஆனை வேட்டையர்
"அம்மன் உண்மைதான்! ஆனை தந்தனள்,
அவள்ப ணிக்கிதோ பொன்னு" மென்றனர்!

97. அன்ன வர்தரு காணிக் கைகொண்டே
அன்றி யற்றிய சிறிய கோவிலே
பின்னர் மென்மெலப் பெருத்து வந்தது!
பெருகி வந்ததிங் கடியர் கூட்டமும்!

98. பொறிக்கி டங்குறுங் கடவை யாகிய
பொறிக்க டவைக்கண் பொலிவு பெற்றதால்
பொறிக்க டவைக்கண் ணகியம் மன்பெயர்
பொறித்திடப் பெற்ற தித்தளி யென்பர்!

**தலப்படலம்**

99. பொங்க லுக்குப் பொங்கல்
பொறிக்க டவையில் மாந்தர்
அங்கு சாவகச் சேரி
அங்கா டிக்குப் போவர்!

100. திருகு முறுகு கிளைகள்
செறிந்த மருது வனங்கள்,
மருத வயல்கள் செந்நெல்
வளங்குலாவுங் கோவில்!

101. கோவில் முன்றில் வயல்கள்
குதறி உழுங்கா ளைகளை
ஏவும் உழவர் அதட்டல்
எதிரொலிக்கும் சுவர்கள்!

102. பண்டம் வாங்கிச் சேர்ப்பர்!
படகில் கொண்டு வருவர்!
கொண்டு வந்த பண்டம்
குஞ்சுப் பரந்தன் துறையில்,

103. வண்டி பலவில் ஏற்றி,
வரிசையாக நிறுத்தி,
மண்டி யுடுக்குப் பறைகள்
மங்கல மேளம் முழங்க,

104. அடியர் கூட்டம் ஆர்க்க,
அரிய பவனி வந்து,
அடையும் அம்மன் கோவில்!
ஆதி வழக்கம் இதுவே!

105. தண்ட வாளம் போட்டு
தாரில் பாதை போட்டு
கண்டி வீதி வந்த
காலம் வழமை வேறு!

106. மந்தி ரங்கள் சொல்லும்
வழக்க மில்லை! மண்டூர்
சந்நி திகதிர் காமம்
தழுவும் மரபில் வாயைத்

107. துணியாற் கட்டி மௌனம்
தொடரும் பூசை இல்லை,
பணிவு, பக்தி யூட்டும்
பறையின் துரித இனிய

108. கணக ணப்பு, மணிகள்
கலக லப்பின் துணையில்,
மணங்கள் பல்கும் பூக்கள்
வண்ண மழைக் கூடு,

109. தூப வாசங் கமழ,
தூய்மை யெங்கும் மிளிர,
தீப காந்தி ஒளிர,
சிந்தை யாவுங் குளிர,

110. மாதா பூசை தொடரும்!
மௌன பூசை நிகழும்!
ஓதா தோதுங் கீதம்
ஒன்று கோவில் உணரும்!

111. மரபு வழியில் கிரியை
வரிசையாக நிகழும்!

குரவர் கூட்டம் குருக்கள்
கூறா துதவி நிற்பர்!

112. கவலை, துக்கம், அச்சம்,
கனல்வு, சோர்வு நீங்கி
எவரும் அன்னை மயமே
இங்கு பூசை நேரம்!

113. பாவத் திரைகள் நீங்கி,
பாச மறைப்பு நீங்கி,
தேவி கோலந் துலங்கும்
சிந்தை, நெஞ்சம் அனைத்தும்!

114. இயன்ற பணிகள் அனைத்தும்
இயற்ற நாம்அ வட்கு,
நயக்க நாம னைத்தும்
நல்கும் அம்மை என்றும்,

115. மோட்ச வேட்கை எம்முள்
மூளும்நா ளிருந்து
ஆட்டும் பொறுப் பனைத்தும்
அவள்சு மப்பாள் என்றும்,

116. காசுக் காக நாணங்
கழற்றி வீசல் - நாசம்!
ஈசற் காக எதையும்
இழத்தல் உய்தி என்றும்,

117. பதைப்ப வர்க்குப் பரிதல்,
பசிப்ப வர்க்குப் பரிதல்,
துதிப்பி னிற்குச் சிகரம்
சுவாமி மகிழும் என்றும்,

118. எறிக ணைம ழைக்குள்
இருந்து கொண்டும் பூசை
முறிவு றாமல் நாளும்
மூன்னு வேன் நான் என்றும்,

119. தெளிந்த ஞான அடியர்
திருக்கு ழாத்தைக் கொண்டு
பொழிந்த ருளினைக் காப்பாள்
பொறிக்க டவையில் அம்பாள்!

120. முருகைக் கல்ப தித்த
முன்கி ணற்றின் தீர்த்தம்!
பெரிய கேணி தள்ளி!
பின்வீதி க்கோர் கிணறு!

121. சின்னன் கோவில் என்று
செப்பும் வண்ணம் பெரிய
அன்ன மடமும் வடக்கில்!
அருகிற் பொங்கற் கொட்டில்!

122. பரந்த புறத்தி வீதிப்
பக்கம் பழம்பெய் பாலை!
சரிந்து வேர்க்கால் தூக்கிச்
சுதுர்க ளாடும் புளிகள்!

123. காக்க வீதி யெல்லை
கைகள் கோத்து நிற்கும்
தேக்க மரங்கள் வரிசை
திக்கு பால கர்போல்!

124. கால போகம் அன்றிக்
கனலும் சிறிய போகம்

சாலச் செந்நெல் விளைந்து,
சடைக்கும் வயலின் சூழல்!

125. கர்ப்பக் கிரகத் திருந்து
காலப் போக்கில் வளர்ந்து
அர்த்த மண்டபத்தோடு
அணிம காமண் டபமும்

126. தம்ப மண்ட பம், பின்
சால்ம ணிமண் டபமும்
நம்பு மடியார் படைத்து
நாளும் ஏத்தும் அம்மன்!

127. கட்டைக் கோபு ரத்துக்
கண்டா மணியின் நாதம்
வட்டப் பஞ்ச மணிகள்
மளம ளென்னுங்கீதம்!

128. பிள்ளை வரம்நீ தந்தாய்
பேர ருள்தாய் என்பர்!
அள்ளிச் செல்வம் ஈந்தாய்
அருட்க டல்நீ யென்பர்!

129. மாறா நோயைத் தீர்த்தாய்
மாம ருந்தே யென்பர்!
சேறா யிழிந்த மனத்தைத்
திருத்தி னாய்நீ யென்பர்!

130. குலைந்த என்கு டும்பம்
கூட்டி வைத்தாய் என்பர்!
அலைந்த அகதி வாழ்வில்
அமைதி தந்தாய் என்பர்!

131. உடன்பி றந்தோர் பகைமை
ஒழித்தி ணைத்தாய் என்பர்!
குடிம றக்க வைத்தெம்
குடியைக் காத்தாய் என்பர்!

132. பட்டி பெருக வைத்த
பரம்பொ ருள்நீ யென்பர்!
கொட்ட மடக்கி மகனைக்
குணங்கொள் வித்தாய் என்பர்!

133. தாலி யேற்றி வைத்த
தாய்க்குத் தாய்நீ யென்பர்!
வேலிச்சண்டை தீர்த்து
விடிவு தந்தாய் என்பர்!

134. யார்பிழைவிட் டாலும்
அதுபு ரியேன் நானென்
பேர்ப தித்த கற்பின்
பேரிறைவி யென்பர்!

135. குடிகள் குற்றந் தடுக்கக்
கோன்செய் குற்றந் தடிந்து
நெடுஞ்செ ழியனைச் சாய்த்த
நீதித் தெய்வம் என்பர்!

136. இலாப மும்உன் னோடே!
இழப்புந் தான்உன் னோடு!
கலாபன் அன்னாய் என்று
களித்து ழைக் கும் ஊரே!

137. எங்கெங் கெல்லாம் இருந்தும்
இவ்வா றெல்லாம் அடியர்

பொங்க மகிழ்ச்சிக் கண்ணீர்,
புகழ்கின் றார்கண் ணகியை!

138. கேட்பதெல்லாந் தந்து,
கிட்ட நின்றே காத்து,
நாட்டில் எங்குங் கோட்டம்
நண்ணி னாள் கண்ணகியை

139. மூர்க்கத் தெய்வம் என்று
மூடர் பேசித் தோற்றார்!
காக்க அவரைக் கூடக்
கண்ண கித்தாய் கால்கள்!

140. குற்றஞ் சற்றும் பொறுக்காள்!
குணமறிந்து மக்கள்
பற்றி னோடு பயமும்
பணிவுங் கொண்டே நடப்பர்!

141. இரணை மடுவின் தண்ணீர்
இங்கு வயல்கள் வாய்க்கால்
புரளும் மீன்க ளோடு
புகுந்து பசுமை விரிக்கும்!

142. கன்றுக் கூட்டம் பட்டிக்
காவ லுக்குள் நிற்க,
சென்று மேய்ச்சல் பசுக்கள்
தெருவில் புழுதி கிளப்பும்!

143. சடைத்த பூவ ரசுகள்
சந்ந தஞ்செய் நிழல்கள்
உடுத்த புல் வெளிக்குள்
உலாவும் ஆட்டுப் பட்டி!

144. அம்பாள் மூல மூர்த்தி
அமைந்த இந்தத் தளியில்
தும்பிக் கைய னோடு
சுடரும் வேலன், முத்து

145. மாரி யம்மன், காக்கும்
வைர வன்தக் கனைச்சாய்
வீரபத்திரர் ஏழு
விரிந்த தலை கொள் நாக

146. தம்பி ரானுந் தங்கிச்
சாலும் பூசை ஏற்பர்!
எம்பி ராட்டி தளியோர்
இன்ப ராச்சி யந்தான்!

147. பூம்பு காரில் பிறந்து
போய் மதுரை திருத்தி
பாம்பாய்த் தலைகள் ஐந்து
படைத்தெ ழுந்தாள் என்றும்

148. தெற்கு நோக்கி ஊர்ந்து
சேர்ந்து நயினா தீவு
நற்க ருணையின் அன்னை
நகர்ந்து வட்டுக் கோட்டை

149. சீர ணிக்கண் தங்கிச்
சேர்ந்தங் கணமைக் கடவை
ஊரள வெட்டி கடந்து
உற்றாள் சுருவில் என்பர்!

150. இன்னும் பல்பேர் சொல்வார்
இக்கண் ணகியாம் நாகம்

துன்னு நயினை நின்று
தொடர்ந்து கோப்பாய் ஏகி

151. மட்டுவில் வேலம் பிராயில்
மருவிக் கச்சாய் கடந்து
எட்டி நாகர் கோவில்
எய்தி யிங்கும் புளியம்

152. பொக்க ணைக்கும் நகர்ந்து
முல்லைத் தீவை நண்ணிப்
புக்காள் வற்றாப்பளையும்
பூத்தா ளென்பர்! நாகம்

153. போன ஊர்கள் தோறும்
பூத்தன கண்ணகி தளிகள்!
ஈனர் தம்மை மதுரை
எரியின் நீற்றித் தணிந்து

154. சேர நாடு சென்று
தெய்வ மாகி நின்று
சாரல் மலையிற் பெண்கள்
தங்கள் வழிபா டேற்று

155. வானார் மோட்சம் நின்று
வந்த தேவர் தேரில்
போனாள் பத்தினித் தெய்வம்
பூசை பெற்றாள் என்று

156. சிலப்பதி காரப் பாவில்
செப்பி வைத்தார் இளங்கோ!
கலக்கிக் கனக விஜயர்
கட்டித் தலையி லேற்றி

157. இமயம் நின்று கொணர்ந்த
இருங்கல் லிற்சிலை படைத்து
தமிழர் தெய்வம் தனக்குத்
தந்தான் சேரன் கோவில்!

158. மன்னன் அக்கய வாகு
வழங்கும் ஆணைக் கேற்ப
மன்னு கந்த ரோடை
மட்டு மன்றி வடக்கில்

159. திகழ்ந்த ஊர்கள் எங்கும்
சிங்கை விரோத யன்கோன்
தகுந்த தளிகள் தந்தான்
தாய்,கண் ணகிக்கு! சொலும் நூல்!

160. பாடல் பெற்றாள் ஊஞ்சல்
பன்றித்தலைச்சி தன்னில்
நீடு கண்ண கித்தாய்!
நிலவு வடம ராட்சி

161. மந்தி கைக்கண் ணகிக்கும்
மலர்ந்த தோர்அந் தாதி!
முந்தி நவாலி யூரில்
முகிழ் களையோ டையில்

162. ஓங்கு கண்ண கிக்கும்
உண்டு உயிர்வர்க்கத் தகவல்
ஆங்குங் கோப்பாய் இத்தாய்
அருள்பா டூஞ்சல் உளதாம்!

163. இணுவை வட்டு வினியில்
இன்ன ருட்கண் ணகிக்கும்

பணி விண் ணப்ப வெண்பா
பனுவல் நூலு முண்டு!

164. பொறிக்க டவையில் ஆதிப்
பூத்த கண்ண கிக்கும்
செறித்த செஞ்சொல் ஊஞ்சல்,
திகழ்தோத் திரப்பா வுண்டு!

165. தலபு ராணந் தகஇத்
தாய்க்குப் பாடு வித்து
தலைமை சான்ற ஒன்றைத்
தாம்தெ ரிந்தெ டுக்க,

166. சைவ உலகுக் களிக்க,
தர்மக் கர்த்தர் சபையார்
மெய்வி ருப்பி னோடு
விளம்ப ரமுமே செய்தார்!

167. பாட நண்ணும் புலவோர்
பரந்தன் சந்தி நின்று
கூடுங் கீர்த்திப் பவனி
கொள்ள வைக்கப்பட்டு,

168. கோவில் வந்து சேர்ந்து,
கூடி மண்ட பத்தில்,
தேவி தலபு ராணம்
செய்து செய்து தருவார்!

169. அன்றும், அந்தப் போட்டி
அறுதி நாளின் வரைக்கும்
துன்றும் அடியர்க் கெல்லாம்
தொடரும் அன்ன தானம்!

170. தக்க பாக்கள் என்றிச்
சந்நி தானம் ஏற்கும்
அக்க விதை தம்மை
ஆக்கி நல்குங் கவிஞர்

171. பொற்கி ழியுமே வழங்கும்
புகழ்ச்சி ஏற்பர் என்றும்!
நற்பு லவர்கள் பல்லோர்
நயந்து வந்தும் இருந்தார்!

172. தொண்ணூ றானி யாறு
சுடரும் அந்நாள் நெருங்கும்!
மண்ணி லந்த நாட்கள்
வந்த போர்க்க லக்கம்

173. தடுத்த திந்தப் பேறு!
சண்டை நடுவும் இன்றோ
கொடுத்த அம்மன் ஆணை
கொண்டு சென்னி மீது,

174. தலபு ராணம் ஒன்று
சமைக்கப் பட்டது பார்க்கின்
குலவு கண்ண கித்தாய்
கூர்ந்த சித்தம் அன்றோ?

**உற்சவப் படலம்**

175. எட்டாக் காலம் பூசை வைத்தோர்
எவரெவ ரென்று சொலல் அரிதாம்!
கிட்ட ஒருநூ றாண்டின்முன்
கீர்த்திக் கரைச்சிப் பூநகரி

176. முத்துப் பூசாரி யார்தம்மை
முதலாய்க் கொண்டால் அன்னவர் பின்
இத்திருக்குஞ்சுப் பரந்தனிலே
இருந்த சுந்தரம் பிள்ளை செய்தார்.

177. அவர்பின் பொன்னம் பலமென்பார்
ஆற்றி வந்தார்! அவர் பின்னால்
இவண்வாழ் வேத வனமென்பார்
இயற்றி வந்தார்! முன்னைநாட்

178. பூசாரி முத்தர் பெறாமகனார்
நாக லிங்கமும் புரிந்ததுண்டு!
பூசாரி பொன்னம் பலம் மகனார்
இரத்தினம் புரிகின் றாரின்று!

179. கார்த்தி கேசுஎன் பாருஞ்சில
காலமிங்கு பூசை செய்தார்!
நேர்த்தி பெறஇப் பூசை, பக்கம்
நின்றுத விடும்பக் குவர்பலராம்!

180. ஆதி நாள்தொட் டன்னைமர
அடியில் குடிலில் உறைந்து வந்தாள்!
சோதி மிகமிக அயலூரார்
தொலைவிருந் தறிந்தோரும் தேடிவந்தார்.

181. பூசாரி மாரும் ஊர்ப்பெரிய
பொருள்மிகு கமக்கா ரர்களுமாய்
தேசார் பங்குனி வேள்வியுடன்
திங்கள் வெள்ளிகள் பூசைவைத்தார்!

182. ஓலைக் குடில்கள் மண்சுவர்கள்
ஒவ்வோர் நேரப் பூசையுடன்

காலங் கழித்த கண்ணகித்தாய்
கனிந்தாள் கீர்த்தி மிகவிரைந்து!

183. குஞ்சுப் பரந்தன் உடையாராய்க்
கொண்டார் பதவி ஒருபெரியார்!
எஞ்சாப் புகழ்ச்சபா பதிப்பிள்ளை
இத்தாய் மீதுயிர்ப் பற்றெய்தி

184. கோவில் அலுவல் அனைத்துமே
குளிர்ந்து குனிந்து நடப்பித்தார்!
சேவையை இவர்பின் தொடர்ந்திட்டார்
சிந்தை களித்தே இவர்தம்பி!

185. கிராமத் தலைமைப் பணிகொண்டு
கிளர்நெஞ் சுக்கை லாயபிள்ளை
பராம ரித்தார் பலவருடம்
பளபளப் புறவே அருள்வெளிச்சம்!

186. செங்கல் லாலே இக்கோவில்
சிறக்க அமைக்கப்பட்ட தந்நாள்!
அங்குற் றம்மை அருள்வீச்சு
அகலப் பரந்தடி யார்மிக்கார்!

187. காலங் கனிந்த தென்றெண்ணிக்
கைலாய பிள்ளை பெருகுபணிச்
சீலஞ்சிறக்கப் புரிபலமார்
செயற்சபை ஒன்றை அமைத்திட்டார்.

188. பரிபா லனசபை யதனிடமே
பத்தினி கோவிற் பொறுப்பெல்லாம்
சரிவர ஒப்படைத் துதவி நின்றார்
தாய்பணி யாய்ச்சபை இயங்கியது!

189. தொண்டுக்குக் கிடைத்த வாய்ப்பென்று
துதித்துக் கண்ணகி பணிதலைமேற்
கொண்டு பரிபாலன சபையார்
குனிந்தே கூடி வளர்க்கின்றார்!

190. பத்ம நாதன் துணைக் கல்விப்
பணிப்பா ளர்தம் தலைமையிலே
வித்வ குருபால சுந்தரமாம்
மிளிர் பொரு ளாளர் செயல்மிகுக்கும்

191. செயலர் தவேந்திரம், நவரத்தினம்
சேர்வைத் தியலிங்கம் தர்மலிங்கம்
இயைபணி ரவி, வேல் முருகையா
என்பவ ரோடும் லோகநாதன்

192. கணேச லிங்கம் இணைதரும
கர்த்தா சபையுடன் ஓர்தொண்டுக்
குணாளர் செயற்குழு வுஞ்சேர்ந்து
கோவில் சிறக்க உழைக்கின்றார்.

193. இப்பணி யாளர்வரிசையிலே
இறைபணி யாற்றி நெஞ்சில் நிற்கும்
அப்பெரி யார்கள் கிருஷ்ணபிள்ளை
கணபதிப்பிள்ளை அடுத்துவந்த

194. சிவசுப் பிரமணி யம்மற்றும்
தியாக ராசா, செல்லத்துரை
தவநெறித் தம்பிப் பிள்ளையுடன்
சந்திரபாலனும் மறக்கவொணார்!

195. பங்குனி வேள்விப் பொங்கலிங்கு
பாரே யறியப் பொலியும்விழா!

எங்கும் எங்கும் அடியர்மயம்
இந்தக் கோவில் சூழ்வெளியில்!

196. வன்னி யூர்கள் அனைத்திருந்தும்
மன்னார் யாழ்குடா முழுதிருந்தும்
அன்னை கண்ணகி அருள்வேண்டி
அலையெழும் அடியர் கமழ்வெள்ளம்!

197. பகலும் இரவும் அன்னதானம்
பரிவாய்ப் பக்தர், பசித்தோர்க்கு
தகுமா றமைந்த மடந்தன்னில்
தாரா ளமென வழங்கப்படும்.

198. தாங்கற் கரிய இடுக்கண்கள்
சாடவருங்கால் அதிர்ந்தஞ்சி
ஏங்கி வைத்த நேர்த்திகளாய்
இடுக்கண் தீர்ந்தோர் நெஞ்சுருக,

199. அறுவடை முடிந்த அக்களிப்பில்
அலையெழுங் காசு பணச் செழிப்பில்
நிறைவு மிளிரும் பொங்கலிது!
நெஞ்சம் மறக்கா வேள்வியிது!

200. பங்குனி வசந்தம் பரிமளிக்கப்
பக்கச் சோலைகள் கிளையமர்ந்து
கொங்குணுங் குயில்கள் கூவிசைகள்
கொஞ்சும் பங்குனி வேள்வியிலே!

201. பரந்தன் சந்தி நின்றுவரும்
பாங்குருத் திரபுரம் நின்றுவரும்

பெருந்தொலைப் பூநக ரியில்நின்றும்
பெருகிச் சேரடி யவர்க்கெல்லாம்,

202. அந்த நெடிய பாதைகளில்
அன்னதானப் பந்தல்கள்
இந்த வேள்வித் திருநாளில்
இன்னமு தளிக்கும் ஆனந்தம்!

203. நேர்த்தி தம்மை நிறைவேற்ற
நெருங்குவர் அம்மன் கோவிலினை!
ஊர்க்குல குக்குப் பெருந்தஞ்சம்
உந்தருட் கண்ணகி எனல் தெரியும்!

204. தூரத் தூர ஊர்கள் நின்று
துழும் பக்தர் பாட்டுடனே
சேர உடுக்கு தவில் முழங்கித்
திகழும் ஆட்டக் காவடிகள்

205. கூட்டங் கூட்டமாய் வந்து
குழுமுங் கண்ணகி வாசலிலே!
ஆட்டம் நடக்கும் காவடிகள்,
அன்னை அழகு வீதியெங்கும்!

206. அலகு பாய்ச்சிச் செதில்பிடித்தும்
ஆடுங் காவடி பார்த்து நின்று
புலன்கள் நெக்கிப் புளகித்துப்
பொழியும் விழிகள் மழைமழையாய்!

207. வானத் தேவர் இறங்குகிறார்
வண்ணக் காவடி தூக்கியென
கானம் ஒலிக்க மேல்கீழாய்
கைகள் வேப்பிலை வீசிவர

208. துலாவில் தொங்குங் காவடிகள்
சுடரப்பக் தர்கள் ஆடிவரும்
உலாவு பறவைக் காவடிகள்
உள்ளம் உருகி விம்மவைக்கும்!

209. உழுபொறிப் பெட்டிகள் உவந்தேற்றி
ஒன்றாய்ப் பலவாய்க் கொணர்ந்திந்தத்
தளிமுன் பறித்துக் குவிக்கின்ற
தனிமரக் குற்றி விறகுமலை

210. மாலைபூ சகர் எறிமுட்டி
வான்தொடுஞ் சுவாலை எழஎரிப்பர்!
காலையில் நான்கு மணியளவில்
காவடி கள்கொண் டடியவர்கள்

211. தணல்மய மானஅத் தீக்கிடங்கில்
சந்நத மாகவே இறங்கிடுவர்
அணியணி யாக! பக்தர் செய்யும்
அம்மாளாச்சிக்கரோ கராவென்

212. ஆனந்த முழக்கில் வானதிர,
அடியவர் முனிவர், அமரராவர்!
மீனுந்து விழியருட் கண்ணகித்தாய்
விளங்குரு வெளிப்படும் நெஞ்சமெலாம்!

213. அவ்விர வறுதி அவித்தாக்கும்
அன்னம் ஆலய முன்றிலிலே
செவ்விய காலைப் பூசைக்காய்ச்
செழுமலை யாகக் குவிந்திருக்கும்!

214. பூசை யூடச் சோற்றுமலைப்
புகுந்து கண்ணகி அருளமிழ்தம்

பாசம், பாவம், நோய் தீர்க்கும்
பக்குவ மருந்தாய் ஓங்கிவிடும்!

215. நீர்ச்சோ றென்ற பெயர்கொள்ளும்!
நிறைந்தங் குள்ள அடியவர்கள்
கூர்த்தெழும் ஆர்வச் சிலிர்ப்போடு
கும்பிட்டு வாங்கி அருந்திடுவர்!

216. **வைகாசிப் பொங்கல்** என்பதுவும்
மற்றோர் புகழ்மிகு விழாவிங்கு!
வைகாத் தாள்முதல் இக்கோவில்
வாழ்மூர்த் திகளெலாம் பூசைபெறும்!

217. கோயில் இதன்தொல் மரபினிலே
குருவன்றுங் கொடி ஏற்றிடுவார்!
தூய ஆறு பானைப்பொங்கல்
தொடர்ந்திரா அமுதுப் படையல் வைப்பர்!

218. பெரும்போ கம்விதை பயிர்செழிக்கப்
பேரருட் கண்ணகி வரம்வேண்டி
அரும்பொங்கல் இங்கே இடுவார்கள்
ஆம் அது **ஐப்பசிப் பயிர்ப்பொங்கல்**!

219. கார்பொழிந் தேற்ற வெயில்தந்து
களை, பூச்சி, யானைக்குள் பயிர்காத்து
ஊர்மகிழ்ந் துண்டு பசிபஞ்சம்
ஒழிந்திட வைத்த கண்ணகிக்கு

220. மார்கழி தன்னில் நன்றிசொல்லி
மஞ்சனம் பொங்கல் வழங்கும் விழா!
நேர்நிறை வுழவர் நினைந்துருகும்
**நிறைமணி விழாவோர்** புனிதவிழா!

221. “வாழ வழி, கட வுளினருளை
மதித்து நன்றி சொல்லியுருகல்”
சூழும் உலக முழுமைக்குமே
சொல்லும் இந்த விழாவாழ்க!

222. பொக்குளிப் பான்சொறி சின்னம்மை
போற்கொடும் வெப்பு நோய்கள்நின்று
எக்கா லத்துந்தமைக் காத்துவரும்
இன்தாய் கண்ணகி ஊர்ஏத்தும்!

223. ஆனியில் அமையும் பெருவிழாக்கள்
அடுத்துப் பத்து நாள் நடக்கும்!
ஏனைப் பொங்கல் வேள்விகளில்
இத்தளிக் குருவே கொடியேற்ற

224. இந்தப் பெருவிழா விற்குமட்டும்
ஏற்றுவார் வேதியர்! நாள்பத்தும்
மந்திரஞ் சொல்லிப் பூசை செய்வார்!
மங்கலப் பத்தாம் நாளிரவு,

225. சுமங்கலி பூசை மந்திரங்கள்
துதிகள் ஒலிக்கப் பெண்கள்சுடர்
சுமந்திடுந் திருவிளக் குப்பூசை
சோபை மிகச் செய்வர் சந்நிதியில்!

226. மூதறி ஞர்நவ ரத்தினமும்
முதலியா ராம்சபா நாயகமும்
ஆதிப் பழம்பள்ளுப் பாடல்ஒன்றும்
அறிஞராம் ந.ச.பொன்னம்பல

227. பிள்ளையும் ஆய்வாளர் சற்குணமும்
பெரிதாய்க் குறிப்பிடக் காண்கிறோமிங்

குள்ள மிகப் பழங் கண்ணகித்தாய்
உறைதளி பொறிக்கட வையுமென்றே!

### அற்புதப் படலம்

228. ஒருகாலம் கோவில்முன் சற்றுத் தள்ளி
ஓங்குபுளி மரநிழல் வார்க்கப் பட்ட
உருநாட்டில் அம்மனிங்கு மூலமூர்த்தி!
ஒளிவீசி அருள்வெள்ளம் பெருகுங்காலம்!

229. பங்குனிக்கண் நிகழ்வழமை வேள்வி அன்று
பல்வூர்கள் நின்றுவரும் பக்தர் வெள்ளம்
பங்குபற்றித் தயிர்பால்நெய் வழங்கும்! இந்தப்
பாங் கயலூர்க் கல்லிருப்பார் தமக்கும் உண்டு!

230. ஓராண்டுப் பொங்கலிலே வழமை போல
உபகரிக்கப் பால்தயிர்நெய் வந்தார் பிந்தி!
பாராமல் வேளைதனிற் பொங்கிக் கோவில்
படைப்புமுடித் திருந்ததனாற் பதைத்தார் சீறி!

231. மெல்ல யாரும் அறியாமல் மூல மூர்த்தி
விதமாகத் திருடிப்போய் வைத்துள் ளார்கள்
கல்லிருப்புக் கண்ணகியின் கோவில் என்பர்!
காணுமந்தச் சிலைகிழக்குத் திசைநோக் காமல்

232. பொறிக்கடவைத் திசைநோக்கி இருப்ப தாயும்
புகலுமொரு கதையுண்டாம்! எனினும் இங்கு
குறைச்சலின்றிக் கண்ணகியின் அருட்பெ ருக்கு
கொப்பளிக்கக் கண்டயர் கூட்டம் பல்கும்!

233. எரியூட்டப் பட்டதந்தப் புளியோ! நின்ற
இடமன்றே கைமாறி வயலா யிற்று!

உருநாடு வார்த்தைபுளி என்னும் நாமம்
ஊராரின் வாய்களிலே ஒலிக்கும் இன்றும்!

* * *

234. முன்னொருகால் இக்குஞ்சுப் பரந்த னூரில்
மாப்பாண முருகேசர் என்னும் பெயர்கொள்
துன்னாடு மாடுகளின் பட்டி செந்நெற்
சோனைவயல் நிலப் பிரபு வாழ்ந்து வந்தார்!

235. பொறிக்கடவை அம்மனிடம் வருவ /தில்லை!
பொங்குவதோ பூசனையோ புரிவ தில்லை!
கிறுக்கர்போல் விட்டொதுங்கி வாழ்ந்தார்! ஆனால்
கிட்டியது கண்ணகியின் அருள்தேர் காலம்!

236. அதுமாரிப் பெரும்போகம்! நெல்வி தைத்து
ஆகாயம் பார்த்திருந்தார் வன்னி மக்கள்!
கதிர்தள்ளும் பருவத்தில் கழனி யெல்லாம்
காயும்! குஞ்சுப் பரந்தனூர் உழவர் ஏங்கி,

237. வழமைபோல் மழைவேண்டிக் கண்ண கிக்கு
வைக்கமுற் பட்டார்கள் பெருங்கு ளிர்த்தி!
குளிர்த்தி, குளிர் முழுக்குக்காம் நிதிபொ ருட்கள்
குடிமனைக்குள் பூசகர் போய்ச் சேகரித்தார்!

238. மாப்பாண முருகேசர் மனையுஞ் சென்று
வாய்விட்டார் பூசகர்! அப் பண்ணை யாரோ
காப்பதற்குப்பயிர்அம்மன் மழைநல் காளேல்
கட்டாயம் நெல்திருப்பித் தருதல் வேண்டும்!

239. முறைப்போடு சொல்லிச்சிறி தளவு நெல்லே
முதிர்கருணைக் கோவிலுக்குக் கொடுத்தார்! சேர்த்துப்

புறப்பட்டுக் கடல்கடந்து பண்டஞ் சேர்த்துப்
பூசகர்வந் திறங்கிப்பத்து வண்டி தம்மில்

240. பண்டங்கள் ஏற்றுகையில் வானி ருண்டு,
படபடென்று துளியெறிந்து வளிகு ளிரந்து,
கொண்டுமின்னல் இடிமுழங்கிப் பெருக வெள்ளம்
கொட்டுகொட்டென் றிரைந்துமழை கொட்டிற் றன்று!

241. ஆனந்த மாய்ப்பண்டம் கொண்டு சேர்த்து
அபிடேகம் செழிப்பாக அம்மன் ஏற்றாள்!
தானுந்தான் முருகேசர் தனைம றந்து
சந்நிதிக்கு முதன்முதலாய் வந்தேத் திட்டார்!

242. அன்றிருந்து பொறிக்கடவை அம்மன் அஞ்சி
அடிபரவி ஏத்தினர்! பல்தொண்டு செய்தார்!
குன்றிநின்ற வயல்பசுமை குளிர்ச்சி கொஞ்சி
குஞ்சுப்பரந் தன்குடிகள் குதூ கலித்தார்!

* * *

243. கூடகன்ற குருவிகளாய்க் குறிச்சி நீங்கிக்
குடியகலப் பொறிக்கடவை மக்கள், அங்கு
காட டர்ந்து கண்ணகித்தாய் தளியும்மூடி
கறைக்கண்டர் சிவநகருங் காடா யிற்று!

244. மானினங்கள் பன்றிகுறு முயல்கள் அந்த
வனமெங்கும் நிறைந்துலவும்! வேட்டை நாடி
பூநகரிச் சிலர்திரிந்தார் இந்தக் காட்டில்!
புதைந்தசிவன் தொல்கோவில் தன்னைக் கண்டார்!

245. கண்டங்கு தலையேழு கொண்ட நாகக்
கல்கண்டார்! ஆவுடையார் கல்லுங் கண்டார்!
கொண்டு செல்லத் திட்டமிட்டார்! தம்மூ ருள்ள
கோயிலிலே வைத்தேத்தக் கனவுங்கண்டார்!

246. ஏழுதலைப் பாம்புருவைத் தூக்கிக் கொண்டார்!
இலிங்கமிலா ஆவுடையார் சுமந்து கொண்டார்!
தோளினிலும் தலைமீதுஞ் சுமந்தார் மாறி!
சூழ்காட்டு வேட்டையெண்ணம் துறந்து சென்றார்!

247. ஒளிதவற மண்டுசெடி கொடிக ளூடு
ஊர்நேரே போய்ச்சேர நடக்க லானார்!
வழிதவறிப் பொறிக்கடவைப் பக்கம் வந்தார்!
வாய்வரளும் விடாய்தீர்க்க, ஆற எண்ணி

248. கண்ணகியின் தளியருகில் இறக்கி வைத்துக்
கற்சிலைகள், நீர்பருகிக் களைப்பும் ஆறி,
நண்ணியந்தச் சிலைகளினைத் தூக்கிப் பார்த்தார்!
நட்டகல்போல் அவையசைய மறுத்த தாலே

249. திடுக்குற்றார்! நடுக்குற்றார்! தாங்கள் வேறு
திசையினிலே நிற்பதையும் உணர்ந்த திரந்தார்!
"கிடக்கட்டும் விடு" என்று கிலியி னோடே
கிட்டுவழி தேடிப் போய்ச் சேர்ந்தார் ஊரே!

* * *

250. காடழிந்து நாடாகி, ஓர்கால் அந்தக்
கவின்நாடு காடாகி, நாடாய் மாறி
நீடுசுழல் வட்டத்தில் மீண்டும் அங்கு
நிறைகுடிகள் காடழித்து நாடாக் கிட்டார்!

251. கண்ணகியார் கோவிலடிப் பக்கம் வந்தோர்
கவின்நாக, ஆவுடையார் சிலைகள் கண்டார்!
துண்ணெனவே ஒளிதுலக்கிப் பூசை வைத்தார்!
துலக்கியேழு தலைநாக தம்பி ராற்கும்

252. இடந்தந்து பூசை வழிபாடு செய்தார்!
இருத்திட்டார் ஆவுடையார் கல்லின் மீது

அடங்கொன்ற மறக்கற்பின் அம்மன் தன்னை!
அவள் மகிழ்ந்து கருணைவளம் கூர்ந்தே வந்தாள்!

253. ஆண்டைம்ப தன்முன்னோர் குடியேற் றத்தால்
அடவியழித் துருத்ரபுரம், எள்ளுக் காடு
நீண்டகுளத் சிவநகரூர் தோன்றும் போது,
நெஞ்சையள்ளி வெளிப்படுமோர் அற்பு தந்தான்!

254. ஆயிரமா ண்டுகள் முன்பு, சோழர் வைத்த
ஆதிசிவன் கோவிலழி பாடே ய..து!
நேயமுடன் புதுக்குடிகள் புதுக்கப் பெற்று
நிமிர்ந்தெழுமக் கோவில் மிக நேர்த்தி யாக!

255. பொறிக்கடவைக் கண்ணகிக்கோர் தவிசி ருக்கை
பொருத்தமுற ஆக்கி, அவள் அமர்ந்திருந்த
புறத்திருந்து வந்திருந்த கல்ல கற்றிப்
போற்றிவந்தார்! சிவநகரில் சிவன்கோ வில்தன்

256. ஆவுடையார் கல்லதுவென் றறியப் பட்டே
அங்குநிகழ் மீளமைப்பில் இடமெய் திற்று!
மேவிக்குட முழுக்கு, சிவன் மிளிர்ந்தான் அங்கு,
வீற்றிருக்க லிங்கம்ஆ வுடையார் மீது!

257. ஆண்டுபதி னெட்டாக மகப்பே றின்றி
அகமுருகிப் பொறிக்கடவைப் பெண்ணொ ருத்தி
வேண்டிநின்று பிள்ளைவரம் நேர்த்தி வைத்தார்
விக்கிரகம் வார்ப்பித்துத் தருவதாக!

258. அவ்வரத்தைக் கண்ணகித்தாய் அருளப்பெற்றே
அன்னையான அம்மாது வார்த்துத் தந்த
அவ்வுருவே கருவறையுள் அமர்ந்திங் கின்று
அன்னைகண் ணகியாகப் புரிவாள் ஆட்சி!

259. அன்னதான மாம்பெயரில் அடியர் இங்கு
அடிக்கடிசெய் தானத்தில் அமிர்த தானம்
அன்னை கண்ண கியிங்கு செய்கின் றாள்தான்
அவ்வளவுக் கவ்வன்னச் சுவைக்கீ டில்லை!

260. கடலேரிக் கிக்கரையில் அமைந்த ஊர்கள்
கரைச்சியெனுங் காரணப் பேர் கொண்டு நிற்ப!
அடிநாள்தொட் டிக்குஞ்சுப் பரந்தன் சேரும்
அக்கரைச்சிப் பெரும்பிரிவை! இங்கு வாழும்

261. ஆதிக்குடி மக்களுடன் தென்ம ராட்சி
அக்கரையூர் மக்களும்போய் வந்து வந்து
மாதக்கணக் கில்நின்று வயல்கள் செய்வார்!
மாடாட்டுப் பட்டிகொண்டு வந்து சேர்ந்து,

262. மந்தை மேய்த்து வயற்பட்டி அடைத்துக் காப்பர்!
மாடுண்ணும் அந்நியர்கள் ஆடுண்ணுள்ளூர்
அந்தகர்கள் புகுந்துபட்டி திருடாவண்ணம்
அம்மனிவ ளைத்தொழுவர்! இவள்காக்கின்றாள்!

ஆற்றுப்படலம்

263 சேமமடு நொச்சிக்
குளந்திரியாய் சேர்வனங்கள்
மாமுகில்பெய் நீரில்
மலர்கனக ராயன்நதி!

264. கனகரா யன்குளத்துக்
கப்பால்தென் கிழக்கூறு
கனகரா யன்ஆறே
காண் இரணை மடுத்தேங் கும்!

265. அம்பா(ள்) கமங் கடந்தே
அம்பாள்கன காம்பிகையின்
தெம்பார் அணை அணைக்கச்
சிலிர்கனக ராயன்நதி!

266. நீர்வாழ் முதலைகளின்
நீள்காட்டு மான்மரையின்
கூர்தாகம் இரணைமடுக்
குறைகனக ராயன்நதி!

267. இரணை மடுநின்றும்
இறங்கித் திருவையாறூர்
புரளும் பெருக்காகு தேம்
புகழ்க்கனக ராயன் நதி!

268. திருவையா றின்நெல்லு
வயல்கள் செழிப்பித்துப்
பெருகிக் கிணறூ ற்றாய்ப்
பெயர்கனக ராயன்நதி!

269. கூவங் கிணறுகளில்
குடிதண்ணீ ராய், மேடு
மேவும் பழப்பொழில்கள்
விளைகாய் கனிவளர்க்கும்!

270. தென்னை கமுகுகள்
தேக்குசோளம் பயறுழுந்து
இன்னும்மிள காய்வாழை
ஏத்தநடை போடுநதி!

271. வளைந்தோடும் வாய்க்கால்கள்
மகிழ்ந்தோடிச் சேல்கெண்டை

எழுந்தாடும் நீர் சுமக்கும்
இக்கனக ராயன் நதி!

272. மேயப்புல் வெளிதந்து
மேய்ந்துவரும் பசுப்பட்டி
வாயினிக்கும் விருந்தாகும்,
வான்நதியே இந்நதியும்!

273. குளிப்பார், குதிப்பார்கள்,
குறும்பர்தண் ணீரள்ளித்
தெளிப்பார்கள் ஆளுக்காள்!
சிரித்தோடும் அன்னைநதி!

274. திருவையாற்றூ ர்கடந்து,
சேர்ந்துநகர்க் கிளிநொச்சி,
பெருகுகுடி மனைகளெழும்
பேச்சொலியில் திளைக்கு நதி!

275. விரைந்தோங்கு நகர்வளர்ச்சி
வித்தாகித் தென்னை வனக்
குரும்பைகளில் இளநீராய்க்
குளிர்ந்தினிக்கும் தெய்வநதி!

276. குருடர்போல், நகர்ப்புதினம்
குறித்துநின்று பார்க்காமல்
கரடிப்போக் குச்சந்தி
கடந்தோடுங் கடமை நதி!

277. வானமரக் கரும்பச்சை
மண்வரம்புள் பொன்பசுமை
ஆனகதை மூலவளாய்
ஆறெனினும் ஆறாதாள்!

278. தட்டுவன் கொட்டிவயல்
தன்மோன அழைப்பேற்றுக்
கொட்டுவிழி நீராகக்
குழைந்தோடுந்தாய்மைநதி!

279. ஓடும் அந்த வழியினிலும்
ஊரியான் வயல்குடிகள்
தேடிநகர்ந்தூட்டியே
செல்கனக ராயன்நதி!

280. ஊரியான் தாண்டி,
உமையாள் புரம்புகுந்து,
"பாரிநான்!" என்பதுபோல்
பல்வளமீந் தேகுநதி!

281. "தட்டுவேன் கொட்டியென்
தண்ணீர் முழுதுமென்று"
கொட்டியவ் விருதிவயல்
குதிக்கும்போய்க் கடல்மடியில்!

282. இன்னோர் தூரிசுவழி
இரணைமடு விட்டிறங்கி,
நன்னீர்க் கனக
ராயன் நதிநடந்து,

283. முட்டிப் பலாக்கனிவீழ்,
முத்துவயல் மாங்கனிதாழ்,
வட்டக்கச் சியுமருத்தி
வளங்குலுங்க வளைந்தோடும்!

284. ஆறேழு வாய்க்கால்கள்
ஆகிஇப்பால் ருத்ரபுரம்

நூறா யிரமெழில்கள்
நுகர்ந்துநக ரும்ஆறு!

285. நறும்பூ வணிந்துநிற்க
நகராத நீர்க்குளங்கள்,
வெறும்மூளி யாயுலகின்
மேன்மைக்காய் ஓடும்நதி!

286. கனகமணி நெல்விளைக்கும்
கருணை புரிகளிப்பால்
முனகிடுதல் தவிர்க்கும் ஒரு
முனிவன்தான் இந்நதியும்!

287. பொறிக்கடவைக் கண்ணகியின்
பூம்பாத வயல்செழிக்க,
மறித்துவிட்டும் பலமதகில்
வற்றாமல் ஓடும்நதி!

288. இன்றும், என்றும் என்காட்டில்
இனியமழை தருக்வென
என்றும்போல் கண்ணகியை
இரந்தேத்த ஓடுநதி!

289. உலர்வலய வெப்பு, ஆவி
உயிர்ப்பால் இவள்தணித்தல்
பலர் அறியார்! பாராட்டார் !
என்றாலும் பணிதவறாள்!

290. பாலைவனம் நிகரான
பாலை மரவனங்கள்
கோலவயல், பொழிலாக்கிக்
குளிர்ந்தோடும் கொள்கைநதி!

291. மீன்கொத்தி, நாரைகொக்கு
விண்பறந்து விரிக்குநிழல்
தான்பெற்றுத் தண்மையினைத்
தக்கவைத்தே ஓடும் நதி!

292. மறிதுள்ளும் மதகுகளில்
மடிசிந்தும் வெண்துளிகள்
மறையாகப் பச்சைமான்
வடிவேந்துங் குளுமைநதி!

293. வெண்ணிலவின் பூச்சாடி
விம்பத்துள் நாற்றுயர
தண்ணீர் பொறிக்கடவைத்
தந்துவயல் ஊட்டுநதி!

294. ஊர்குளித்த ஊத்தையெல்லாம்
ஒழிக்குமென்று பொறிக்கடவைக்
கூர்கருணை வயலவர்கால்
குதிகளிலே நுழைந்துலவும்!

295. கொழுத்தபசுப் பட்டி, மறி
குனிந்த தலை நிமிரவிடாச்
செழித்தபசும் புல்வெளியும்
செழிப்பிக்கும் இவ்வூரில்!

296. மடிப்பாலைப் படிப்பாலாய்க்
குடப்பாலாய் மழைபொழிந்து
குடமுழுக்குக் கண்ணகிக்குக்
கொட்டுவித்துக் குளிரும் நதி!

297. தீர்த்தமாய் ஊற்றோங்கித்
திருமஞ்ச னக்கிணற்றில்

கூர்த்தருண்மை, அம்மன்
குளிக்கும்மெய் தொடஓடும்!

**நூற்பயன்**

298. மன, உடற் சுத்தி வருவித் தன்னை
நினைப்பொடோ தின்இந்நூல் நீங்கத் துயர்தீ
வினை, நன்மை பல்கும் விரைந்து!

299. வினைவே றறுத்து, வினைகள் தடுத்து,
தனதுருவை நெஞ்சில் தழைப்பிக்க அம்மன்,
புனிதம் கரணம் புகும்!

300. வரவுள்ள தீங்குணர்த்தி, வாடிமனம் வேண்டி
உருகியழு விக்கும்! ஒழித்தந்தத் தீங்கு
பெருகுவிக்கும் தாய்மேலன் பே!

301. மிடிவே றறுக்கும்! விடிவீந்து தாயின்
அடியே எமதனைத்து அல்லற்கு மிங்கு
முடிவென்னும் ஞானம்ஏ வும்!

302. வெங்குணங்கள் வேரறுக்கும்! மேனிமுகத் தெங்களுக்குப்
பொங்கவொளி ஊரயலார் போற்றிப் புகழ்ந்தணைய
அங்குரிக்கும் நெஞ்சில் அருள்!

303. வெம்பிணிகள் வேரறுத்து, மேனிக் குயிர்ப்பூட்டி,
அம்பிகைதாள் தன்னில் அடக்கிமனச் சாந்திநல்கி,
நம்பகம் மீக்கும் நமில்!

304. வெம்பகை வேரறுத்து, வேண்டாரும் வேண்டிவர
வம்புதும்பு வாதம் மறைவித்து, நிம்மதியும்
இம்பரும்பர் எய்துவிக்கு மே!

305. வெம்பயங்கள் வேரறுத்து, மெய்யருட் கண்ணகி
அம்புயத்தாள் காக்கும் அரணாக்கி எம்முள்தன்
நம்பிக்கை மீக்கும் நயந்து!

306. வெம்மலங்கள் வேரறுத்து, வீழ்ந்து பழிச்செயல்கள்
பொய்ம்மைகளில் மூழ்காப் புனித . நெறிதந்து,
அம்மன்நினைன் யாசையூட்டும், ஆம்!

307. பிறவித் தொடர்வே ரறுக்கும் பேருக்கம் நல்கி
உறுதவங் கைகூ டுரந்தந்து வாழ்வை
நெறியுறுத்தும்! ஓங்கும் நிறை!

308. தந்திரத்தில் நம்பிக்கை வேரறுத்துத் தர்மநெறிச்
சுந்தரத்தில் நாட்டம் சுடர்வித்து, நெஞ்சத்தில்
உந்துவிக்கும் உண்மையொளி.

309. மானிடர்த் தஞ்சமுறும் மாயை துறப்பித்து
தானெதுவும் வல்ல தயாபரி தாள்புகுத்தி
வானுயரச் செய்யும் வழி!

310. தன்னைத்தன் புத்திரரைச் சால்முதன்மை கண்ணகிக்கே
எந்நிலையி லும்நல்கி எய்துவிக்கும் இன்பமெலாம்!
துன்னுவிக்கும் முத்திச் சுகம்!

311. தீயவற்றைப் பார்க்கவும் தீண்டவும் கேட்கவும்
சீயென் வெறுப்பில் சினக்கும் இயல்புதந்து
தூயநிலைச் சேர்க்கும் சுகம்.

312. நாம்விளைக்க ஈசன் நறுக்காய் எழுதியவை
தாம்நம் தலைவிதிகள்! தண்டனைக்குட் காத்தெமை
பூம்பாதம் சேர்க்கும் புகல்!

313. முற்றறிவோர் இல்லை! முழுத்தூயர் யாருமில்லை!
பற்றுவித் தம்மன்கால் பண்பூட்டும் மற்றவரின்
குற்றம் பொறுத்தல் கொடுத்து!

314. அறம்பிழைக்கும் ஆள்வோரால் ஆபத்தில் நிற்கும்
அறங்காக்கும் புத்திரர் ஆருயிர்க்காய்த் தாய்கால்
இறுகப் பிடித்தேத் தெனும்!

315. இறையுண்மை ஏற்கா இருமாந்தோர் நட்பை
அறுமெல்ல நோகாமல்! அஞ்சி விலகென்
றறையவைக்கும் எங்கள் அகம்!

316. அன்பே கடவுள்! அதுவே தரும் மேன்மை!
துன்பம் உயிரெதற்கும் சூழாதே! என்றுணர்த்தும்
இன்பம் இதயத்துள் ஈந்து!

**(மங்களம்)**



வாணி அச்சகம், வவுனியா.